117,
100, 122, 132, 136, 140, 142, 155, 166
403, 407, 408, 409, 416, 419, 420, [illegible], 430, 432
to 436, 437, 438, 442
529, 532, 537, 538, 539, 540, 548, 549
530, 557, 562, 563.



॥ ஸ்ரீ: ॥

॥ [illegible] ஹேமாப்ஜநாயிகாஸமேத
ஸ்ரீதேவநாத பரப்ரஹ்மணே நம: ॥

॥ ஸ்ரீமதே வகுளாபூஷண மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

உபோத்காதம்.

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயமென்னும் இக்க்ரந்தத்தை அருளிச் செய்த ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் கலி 4370-வது விபவ (இங்கிலீஷ் 1268) வருஷத்தில் புரட்டாசிமீ ஸ்ரவண நக்ஷத்திரத்தில் காஞ்சீ புரத்தில் ஹிமவனம் என்றும் திருத்தண்கா என்றும் சொல்லப்படுகிற விளக்கொளி (தீபப்ர காச) எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்தருளின எழுபத்து நாலு ஸிம்ஹாஸனாதிபதி களில் ஒருவராய் விஸ்வாமித்ர (தூப்புல்) குலதிலகரான அநந்த ஸோ மயாஜியாருடைய திருப்பௌத்திரரான அநந்த ஸூரியாருக்கும் தோதாத்ரியம்மைக்கும் திருக்குமாரராக அவதரித்தருளினர். இவரு டைய அவதார வைபவத்தை இவர் குமாரரான தூப்புல் நயினர் 'வேங்கடேஶாவதாரோऽயம் தத்கண்டாம்ஶோऽதவா பவேத்। யதீந்த்ராம்ஶோऽதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து ஸந்ததம்॥' என்றும், 'அன் றிவ்வுலகினை யாக்கி அரும்பொருள் நூல்விரித்து...பின்னும் வென்றி புகழ் திருவேங்கட நாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து' என்றும் நிரூபித்தருளினர். இவர் திருவேங்கடமுடையானுடைய அவதாரம் என்பது 'ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:' என்கிற பூர்வர்களின்

திருவவதாரம்.

அனுஸந்தானத்தினுல் ஏற்படுகிறது. இவருடைய மாதா பிதாக்கள் திருவேங்கடமுடையான் தம்முடைய ஸுவர்ண கண்டையைத் தங்களுக்குக் கொடுத்ததாகக் கனவு கண்ட வ்யாஜமடியாக அவதரித்ததைத் 'திருவுள்ளம் பற்றி 'தக்ஷணாம்ஶ:' என்றருளிச் செய்தது. ஸ்ரீ யதிராஜஸப்ததியில் 'விஶ்ருதவேஸூதீ விகோரவாஸ்வௌரம் யிகா:' என்னும் ஶ்லோகத்தில் அபிப்ரேதமான கொங்குப் பிராட்டியின் வ்ருத்தாந்தத்தை அனுஸரித்து 'யதீந்த்ராம்ஶோயவா' என்றருளிச் செய்யப்பட்டது.

அவதார வைபவம்

'ஆவிராஸீத்ஸ்வயம் வூகபிதவாஸவஹிவ:' என்கிற ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தைப் போலவே ஸ்ரீ தேசிகனும் தம்முடைய அதிமானுஷ ஶக்தியை வெளியிட்டருளினுர் என்பது இவர் சரித்திரத்தில் பலவ்ருத்தாந்தங்களினுல் தெரியவருகிறது. உதாஹரணமாய் இவர் ஐந்து வயதிலேயே ஸ்ரீநடாதூர் வரதாசார்யர் (அம்மாள்) காலக்ஷேப கோஷ்டிக்குத் தம்முடைய மாதுலரான அப்புள்ளாருடன் சென்று அவரை தண்டன் ஸமர்ப்பித்து நிற்கும் காலத்தில் இவருடைய திவ்யதேஜஸ்ஸில் ஈடுபட்டுக் காலக்ஷேபத்தில் விட்ட இடம்தெரியாமல் ஶிஷ்யர்கள் திகைத்து நிற்கும்பொழுது இவர் அந்த இடத்தை எடுத்துச்சொல்லி அர்த்தவிஶேஷங்களை நிரூபித்தருள ஸ்ரீ அம்மாளும் 'வூதிஷ்டாவித வெஷாஙக: வூதிக்ஷிவ்தவஹிஷ்ருத:। ஸ்ரீயாவெஸவிஷ்ரோநஸ்ஸம் ஸ்ரீகல்யாண ஸாஜந:॥' (வேதாந்தங்களை ஸ்தாபித்துப் புறச்சமயங்களைத்தோற்கடித்து வேதங்களும் வைதிகர்களும் கொண்டாடும்படி அநந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாவாய்) என்று ஆதரவுடன் அனுக்ரஹித்தருளினதை இவர் தாமே தம்முடைய க்ரந்தங்களில் பல இடங்களில் அருளிச் செய்திருக்கிறுர். மேலும் ஒரு ராத்திரியில் ஒரு யாமத்தின் பாதியில் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரமென்னும் க்ரந்தத்தை அருளிச் செய்ததும், ப்ரபோத சந்த்ரோதயத்தைப் பாரீர் என்று க்ருஷ்ணமிஶ்ரன் தன்னுடைய அத்வைதபரமான நாடக விஶேஷத்தைக்காட்ட அது பலபடியாலும் கண்டிதமாம்படி ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் என்னும் நாடகத்தை அருளிச்செய்ததும் இவர் பகவானுடைய அவதார விஶேஷம் என்பதைக் காட்டுகிறது.

இவர் வேதாந்தோதயனர் என்று ப்ரஸித்த நாமதேயமான கிடாம்பி ஆச்சானுடைய கொள்பேரனும், தமது மாதுலருமாகிய வாதிஹம்ஸாபுதாசார்யர் என்று பெயர் பெற்ற ஆத்ரேயராமானுஜர் (அப்புள்ளார்) ஸ்ரீபாதத்திலே, ஸ்ரீ க்ருஷ்ணன் ஸாந்தீபீனியி னிடத்தில் அறுபத்துநாலு கலைகளையும் அறுபத்து நாலு நாள்களில் அப்யஸித்தாப்போலே, இருபது வயதிற்குள்ளேயே ஸகல ஶாஸ்திரங்களையும் ஶிக்ஷித்தார் என்பது 'விம்ஶத்யப்தேவிஶ்ருதநாநாவிதவிக்ஷ்யஃ' என்றிவர் தம்மாலேயும், 'ராமாநுஜாயநா ஶாஸ்த்ரயாநாத ஶாஸ்த்ரஃ ஶரஃ। ஈவாவவிம்ஶத்யப்தே' என்றும், 'கிடாம்பிக் குலபதி அப்புளார்தம் தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால் நாவலரும் தென்வடமொழி நற்பொருள் பெற்றநம்பி' என்றும் தூப்புல் நயினாராலும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

வித்தியாப்யாஸம்

இப்படி இருபது ஸம்வத்ஸரத்திற்குள்ளே ஸகலவித்யைகளையும் அப்யஸித்து, தம்மாசார்யனால் உபதேசிக்கப் பெற்ற ஸ்ரீவைநதேய மந்திரத்தை ஆவ்ருத்திசெய்வதற்காக மஹாநதி, திவ்ய க்ஷேத்திரம், பர்வதம் இம்மூன்றும் ஓரிடத்தில் சேர்ந்திருக்கும் மஹாஸித்தி க்ஷேத்திரமாகிய திருவஹீந்திரபுரத்தை நாடி, அதை ஆவ்ருத்திசெய்து, ஸித்திபெற்று, அத்தால் ப்ரத்யக்ஷமான ஸ்ரீகருடன் உபதேசித்த ஸ்ரீஹயக்ரீவமந்திரத்தையும் அந்த க்ஷேத்திரத்திலேயே ஆவ்ருத்திசெய்து, ஹயக்ரீவனுடைய ப்ரஸாதத்தைப் பெற்றார். இவ்ருத்தாந்தம் 'அருள் தருமடியவர் பால் மெய்யைவைத்து தெருள்தர நின்ற தெய்வநாயகா' என்றிவர் தம்மாலும், 'தார்க்ஷ்யப்ரஸாதஸமவாப்தஹயாஸ்யஶக்திஃ' என்று பின்புள்ளாராலும் அநுஸந்திக்கப்பட்டது. விஶ்வாமித்ர மஹரிஷியின் அநுக்ரஹத்தினால் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனுக்கு அஸ்திரதேவதைகள் எல்லாம் நேரில் நின்று 'இமே ஸ்ம பரமோதார கிங்கராஸ்தே வயம் ஸ்திதாஃ' என்று விண்ணப்பம் செய்தாப்போல வித்யாபிமானி தேவதைகள் எல்லாம் தாங்களே இவரை வந்து வரிக்கும்படியான கடாக்ஷவிஶேஷத்தைப் பெற்றார். இது ஸ்ரீஹயக்ரீவஸ்தோத்திரத்தில் 'ஸமாஹாரம் ஸாம்நாம் ப்ரதிபதம்ருசாம் தாம யஜுஷாம் லயம் ப்ரத்யூஹாநாம் லஹரிவிததிம் போதஜலதேஃ ...

துரீதிஶயம்.

தஸ்ய ஶிரோ பயாவஹம்॥' என்றருளிச் செய்யப்பட்டது. இதைத் திருவுள்ளம் பற்றித் தான் ஸ்ரீரங்கநாச்சியாரும் இவருக்கு ஸர்வ தந்த்ர ஸ்வதந்திரர் என்னும் திருநாமத்தைச் சாற்றியருளினது. ‘ ஊ-பிஷண்யாஊள தாகிடுகாஜெ ஸாாகூம் ஊ-ரூஶ்யம் ஶ்ரீ ஜெஅஜீபெ ஶஸ்யஸ-பிரெ: । சுந்யாஜஸ்யாவா.தாீவஊ்ய ஶாூம்ஹெ ஸவடு ஜுகூம் தகூஶூக்ஷாகூாவெ ॥' (இவர் தார்க்கிகர்களுக்குள் ஶ்ரேஷ்டர் என்பதை ஸ்ரீசததூஷணீ முதலிய க்ரந்தங்களிலும், ஸர்வஜ்ஞர் என்பதையும் கவிதையில் பிறர்க்கு நிலமல்லாத சாதுர்யத்தை உடையவரென்பதையும் ஸ்ரீதத்வமுக்தா கலாபத்திலும் காணலாம்)' என்று ஸ்ரீதொட்டயாசார்யரும் இவருடைய அஸாதாரணமான ஜ்ஞானத்தின் விஶேஷாதிஶயத்தை அருளிச்செய்தார். இவருடைய வைராக்யத்தின் அதிஶயமோ விஜயநகர ஸமஸ்தானத்துக்கு எழுந்தருளும்படி எவ்வளவோ நிர்ப்பந்தித்தும் அதை லக்ஷயம் பண்ணுமல் வைராக்ய பஞ்சகத்தை அருளிச் செய்தனுப்பிய வ்ருத்தாந்தத்தினுலும், ஸச்சிஷ்யர்கள் அமுந்திரியுடன்சேர்த்து ஸமர்ப்பித்த தங்கக்காசுகளேயும் ஏதோ புழுக்கள் என்று தூர எடுத்து எறிந்துவிட்டார் என்கிற இவருடைய சரித்திரத்தினுலும் ஸுவ்யக்தமாகத் தெரிவிக்கப் படுகிறது.

திவ்யதேச ப்ரதிஷ்டாதிகள்.

இப்படிப் பகவதவதார விஶேஷமாய் ஜ்ஞான வைராக்யானுஷ்டான ஶேவதியாய் எழுந்தருளி இருந்த இவர் இந்த லோகோபகாரார்த்தமாகச்செய்த திவ்யதேச ஸ்தாபநம் முதலியவைகளும், ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயம் ஶாஶ்வதமாய் நிலைபெற்றிருப்பதற்காகச்செய்தருளின க்ரந்தங்களும் தத்காலத்தில் எழுந்தருளி இருந்தவர்களுக்கு ப்ரவசனம் செய்தருளினதுமான உபகாரங்கள் பல. இவற்றில் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் பகவானுடைய ஆராதனமும், ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஆராதனமும் நிரந்தரமாய் நடக்கும்படி வாதிகளை வென்று ஜயகோஷத்துடன் ஏற்பாடு செய்ததும், அப்படியே ஸ்ரீதேவப் பெருமாள் ஸந்நிதியில் சைவர்களை நிராகரித்துத் திருவாராதனம் கண்டருளப் பண்ணினதும் முக்யமாய் அறியத்தக்கவை. இவற்றில் முதல் வ்ருத்தாந்தம் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் சிலா ரூபமாய் வெட்டப்பட்டிருக்கிறபடியினுலும், பிற்பட்ட வ்ருத்தாந்தம் ஸ்ரீதே

வப் பெருமாள் இவருக்குத் தம்முடைய திருச்சின்னத்தில் ஒன்றை பிருதாக அனுக்ரஹித்துத் தாம் ஒரு திருச்சின்னத்தோடு நாளது வரையில் எழுந்தருளுவதினுலும் ஏற்படுகிறது.

க்ரந்தங்கள்.

இவர் இந்த ஸம்ப்ரதாய விஷயமாய் லோகருசியை அனுஸரித்து ஸங்க்ரஹ விஸ்தரப்ரக்ரியையாலும், ஸம்ஸ்க்ருதம் தமிழ் என்கிற பாஷைகளின் பேதத்தினுலும், அதிலும் வசனம் செய்யுள் என்கிற பேதத்தினுலும், காவ்யம், நாடகம் முதலிய படிகளினுலும் அநேகம் க்ரந்தங்களை அருளிச்செய்திருக்கிருர். இப்படி அநேகம் க்ரந்தங்கள் அருளிச் செய்திருந்தாலும் ஒவ்வொன்றிலும் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான கொள்கைகளைப் பரக்க நிரூபித்திருக்கிருர். இவர் இக்ரந்தங்களில் இந்த விஶிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயார்த்தத்தை நிரூபித்திருக்கும் ப்ரகாரம்—பரதத்வமான எம்பெருமான் எல்லா அவஸ்தைகளிலும் லக்ஷ்மியுடன் பிரிவில்லாத சேர்த்தியை உடையவன் என்பதையும், லக்ஷ்மீ தத்வத்தைப்பற்றி உண்டாகும் சங்கைகளுக் கெல்லாம் ஸமாதானம் அருளிச்செய்து அத்தத்வத்தையும் பரக்க நிரூபித்துத் தத்வ ஸ்திதியை ஒருவராலும் கலக்க முடியாதபடி பூர்ணமாக ஸ்தாபித்தருளினுர். இவ்விஷயமான க்ரந்தங்கள் ஸ்ரீமந் ந்யாயபரிசுத்தி, ஸ்ரீமந்ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீ சதுஶ்லோகீ பாஷ்யம் முதலியவை. நாராயணனே பரதேவதை என்னும் அர்த்தத்தை ஸ்ரீ ஸ்தோத்ர ரத்னபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் ஸ்தாபித்தருளினுர். தத்வங்களைப்பற்றி விஸ்தாரமாய் கீழ்க்கூறிய ஸ்ரீமந் ந்யாய பரிசுத்தி, ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்ஜனம் என்னும் க்ரந்தங்களிலும், ஸ்ரீ தத்வ முக்தாகலாபம், ஸ்ரீஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களிலும் நிரூபித்தருளினுர். ஸர்வாதிகாரமாய் ஸர்வஸுலபமாயிருக்கும் ப்ரபத்தியே பரம ஹிதம் என்னும் அர்த்தத்தை ஸ்ரீநிக்ஷேப ரக்ஷை, ஸ்ரீமத் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகை, ஸ்ரீ கத்யத்ரயபாஷ்யம் முதலியவைகளில் அருளிச்செய்தார். பரிபூர்ணமான ப்ரும்மானுபவமும் அதின் பரீவாஹமான கைங்கர்யமும் பரம புருஷார்த்தமென்னுமர்த்தத்தை ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீ ஸர்வார்த்தஸித்தி, ஸ்ரீ கத்யத்ரயபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் அருளிச்செய்தார். இந்த ஸித்தாந்தத்திற்கு விரோதமாகவும், வேதங்களுக்கு

விருத்தமாகவும் சொல்லுகிற மற்றவர்களை ஸ்ரீ ஶததூஷணீ ஸ்ரீ பரமதபங்கம் முதலிய க்ரந்தங்களில் நிராகரித்தருளினர். ஸ்ரீமத் அதிகரண ஸாராவளீ, ஸ்ரீமத் தத்வடீகை, ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகை, ஸ்ரீமத் கத்யத்ரயபாஷ்யம், முதலிய க்ரந்தங்களில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு அவருடைய திருவுள்ளத்திற்கு அனுகுணமாக வ்யாக்யானம் செய்தருளினர். ஸ்ரீ கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, ஸ்ரீசதுஶ்ஶ்லோகீ ஸ்தோத்ரபாஷ்யம் இவைகளில் ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு வ்யாக்யானம் பண்ணி யருளினர். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான சங்கசக்கராங்கணம், திருமண்காப்பு, பகவதாராதனம்,பகவத்ப்ரஸாதத்தின் மஹிமை, முதலியவைகளை ஸ்ரீஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷை முதலியவைகளில் ஸம்ஶயவிபர்யயங்களறப் பரக்க நிரூபித்தருளினர். பரமஹிதமாகிய ப்ரபத்தியின் உபாயத்வத்தைப் பற்றிச் சொல்லப்படும் ஸகல ஆக்ஷேபங்களையும் அனுவதித்து அவைகளை யெல்லாம் ஸ்ரீநிக்ஷேபரக்ஷை என்னும் க்ரந்தத்தில் நிராகரித்தருளி, ப்ரபத்தியின் அங்காங்கிவிபாகாதிகளை ஸ்ரீமந் ந்யாஸவிம்ஶதி, ஸ்ரீமந் ந்யாஸ திலகம், ஸ்ரீமந் ந்யாஸதசகம் இவைகளில் அருளிச்செய்தார். இவ்வர்த்தங்களை யெல்லாம் ஶாஸ்த்ரபரிசய மில்லாதவர்களும் ஸுலபமாய் அறியுமாறு எளிதான மணிப்ரவாள நடையில் அவரவர்களின் புத்திக்கும் சக்திக்கும் தக்கபடி ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயும் முப்பத்தொரு ரஹஸ்யங்களில் நிரூபித்தருளினர். திவ்யதேசத் தெம்பெருமான் விஷயமாக ஸ்ரீ தேவநாயக பஞ்சாஶத் முதலிய முப்பத்திரண்டு ஸ்தோத்திரங்களை அருளிச்செய்தார். ரஹஸ்யார்த்தங்களை ஸுலபமாய் அனுஸந்திக்கும் பொருட்டு திருமந்திரச் சுருக்கு முதலிய தமிழ்ப்ரபந்தங்களை அருளிச் செய்தார். திருவாய்மொழியின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து அவற்றிற்கு ஸங்கதி முதலியவைகளை நிரூபித்து, ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்னவளீ, ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் ஸாரம் என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார். ஸம்ப்ரதாயார்த்தங்களைப் பால்யத்திலேயே ஸுலபமாய் பரிசயம் செய்வதற்காகக் காவ்யரூபமாய் ஸ்ரீ யாதவாப்யுதயம், ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம், ஸ்ரீ ஹம்ஸஸந்தேஶம், ஸ்ரீஸுபாஷிதநீவி முதலிய க்ரந்தங்களை அருளிச்செய்தார். கீழ்க் கூறிய அர்த்தங்களை அறிவது என்பது சிரகால ஸாத்ய மாகையினால்

அவைகளை யெல்லாம் ஒன்று திரட்டி வேறு க்ரந்தம் வேண்டியதில்லை என்று சொல்லலாம்படியான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் என்னும் க்ரந்தத்தில் பரிபூர்ணமாக நிரூபித்தருளினர். இப்படிப்பட்ட அர்த்தங்கள் எல்லாம் ஏதோ கொஞ்சமேனும் படித்தவர்களுக்கு மாத்திரம் ஏற்படுமே யல்லாமல் கேவலம் பாமர ஜனங்களுக்குத் தெரியாதாகையினல் அவர்களும் அவற்றை ஸுலபமா யறிந்து கொள்ளும்பொருட்டு நாடகரூபமாய் இந்த ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம் என்னும் க்ரந்தத்தில் அருளிச்செய்தார். இது நாடக லக்ஷணங்கள் அமைந்த ஒரு பெரிய அத்புதமான நாடகமாயினும் அதில் ஸ்ரீ விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் கொள்கைகள் ஆங்காங்கு அஞ்சுருவாணி போல் நாட்டப்பட்டிருக்கின்றன.

க்ரந்த நிர்மாணக்ரமம்.

இந்த க்ரந்தமானது ஸ்ரீரங்கத்தில் அத்வைதிகளை ஜயித்து, ஸ்ரீ ரங்கநாதனுடைய திருவாராதனத்தை நடப்பித்து வைத்த காலத்தில் அத்வைத வித்வானாகிய க்ருஷ்ணமிஶ்ரன் தான தோற்றுப்போனதற்குஒரு விதப் பரிஹாரம் இருக்கட்டும் என்று தான் செய்திருந்த ப்ரபோத சந்திரோதயம் என்னும் நாடகத்தைக் காட்டி இதைப்பாரீர் என்றபொழுதே நம்முடைய ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தைப்பாரும் என்று காட்டினதாகவும்க்ருஷ்ணமிஶ்ரனும்இதைப்பார்த்துத்தன்னுடையக்ரந்தத்தைவிடஇது எல்லாவிதத்திலும் மேன்மைபெற்றிருப்பதைக்கண்டு பக்னனாய்ப்போனன் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் ப்ரபோத சந்திரோதயத்தைப்பார்த்து அதுகண்டிதமாகும்படிமறுநாள்ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயத்தை ஒரேநாளில்அருளிச்செய்தார் என்று சொல்லுகிறார்கள். இன்னும் சில ஆசார்யர்கள் ஸகல லோகமும் உஜ்ஜீவிக்கவேண்டும் என்கிற திருவுள்ளத்தினலே இவர் தமமால் முன்னலேயே இக்ரந்தம் அருளிச்செய்யப்பட்டிருந்தபோதிலும் அதுவரையில் ப்ரசுரத்திற்கு வரவில்லையென்றும், க்ருஷ்ணமிஶ்ரன் தன்னுடைய ப்ரபோத சந்திரோதயத்தைப் பாரும் என்று கொடுக்கவும், அதை ஒரு வ்யாஜமாகக் கொண்டு இவரும் இந்த க்ரந்தத்தை வெளியிட்டருளினர் என்றும் அருளிச்செய்வர்கள். ப்ரதிபாதிக்கப்படும் விஷய ஸ்வபாவத்தாலும், வக்த்ரு வைலக்ஷண்யத்தாலும், பகவத் ஸங்கல்ப விஶேஷத்தினலும் ப்ரபோத சந்திரோதயத்தில் சொல்லப்

பட்ட விஷயங்கள் ஸம்யக் கண்டிதமாயிற்றேயன்றி இவர் அதைப் பார்த்து அதைக்கண்டிக்கவேண்டுமென்று இக்ரந்தத்தை அருளிச் செய்தாரில்லை என்பது ஸித்தம். 'ஸஊராவிஹுவ விஹுஶஂஹவஉவீ வெவெஜஶிகாஜஶிகாஃ' என்னப்பட்ட நம் ஆசார்யர்களில் அக்ரா பிஷிக்தரான இவர் ஸ்பர்த்தையினால் இக்ரந்தத்தை அருளிச்செய்யஒரு நாளும் உபக்ரமித்திருக்கமாட்டார் என்பதை எவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். இவர்தாமும் இக்ரந்தத்திலேயே 'ஊவஶிஶ்ய கிவேத்யஶெஷ ஶூவெத்ய நிஶஜாஜெஷூ நிஶூஶஜஶஶவெண। ஹுவிஹக்ஷ ஹிதாஹிதஃ ஹுயொஶஃ கவிநா காஶூணிகெ கூஹிதொஶள,' என்று இக்ரந்தம் ஆரம்பிக்கப்பட்டதற்கு ப்ரதான காரணம் ஸகல லோகோஜ்ஜீவனமென்றும், அதற்கு வ்யாஜமாக ஏதோ ஒன்று ஏற் பட்டது என்றும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கிறார்.

ப்ரபோத சந்திரோதயம் கண்டிதமாயிருக்கும் இடங்கள் சில உதாஹரிக்கப்படுகின்றன:—

(1) ப்ரபோத சந்திரோதயத்தில் கர்வத்தை நிரூபிக்கும் இடத் தில் பணத்தினால் ஏற்பட்ட கர்வம் ஒன்றே நிரூபிக்கப்பட்டிருக் கிறது. இங்கு உயர்ந்த குலத்தினால் உண்டான கர்வம் மாத்திரம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பராமர்சித்தால் அங்கு சொல்லப் பட்ட கர்வம் ஒரு காலத்தில் ஒரு புருஷனுடைய ஆயுஸ்ஸுக்குள்ளே நசிக்கக்கூடியதாகையினால் ஶாஶ்வதமான தென்னக்கூடாதது, ஜன் மத்தினால் உண்டான கர்வமோ இந்தப் புருஷனுடைய ஆயுஸ்பர்யந் தம் ஒரு காரணத்தினாலும் நசிக்கக்கூடாதது என்கிற ஏற்றம் ஸூசிப் பிக்கப்பட்டதாகும்.

(2) டம்பனுடைய வார்த்தையில் 'நான் ப்ரும்மாவின் வீட்டிற் குப்போனேன், அவர் தன்னுடைய துடையில் என்னை உட்கார்த்தி வைத்துக் கொண்டார்' என்னப்பட்டிருக்கிறது. அதே ப்ரகரணத்தில் இந்த நாடகத்தில் 'நான் ஸத்யலோகத்திற்கு ஸமீபத்தில் இருக்கும் மார்க்கமாகப்போய்க் கொண்டிருக்கும் பொழுது ஸநகாதி ரிஷிகளுடன் தன்னுடைய கைகளை அலம்பிக்கொண்டு ப்ரும்மா தானே அர்க்யாதி களை எடுத்துக்கொண்டுவந்தார்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. வீட்டிற்கு வந்தவனை அதிதியாக பாவித்து மர்யாதைசெய்வது

ஸஹஜமாகையினல் அவன் பெரியவன் என்பதேற்படாது. ஆஹ்வானம் இல்லாமல் அவருடைய வீட்டிற்குத் தானகவே போனது இவனுடைய குறைவையே காட்டும். பெரியோர்களைத் துடையில் வைத்துக் கொள்ளுவதில்லை. அப்படி வைத்துக்கொள்வது சிறுவர்களேயேயாதலால் இவனுடைய சிறுபிள்ளைத் தன்மையே தெரிவிக்கப்பட்டதாகிறது. இங்கோ வேறு கார்யமாய் போய்க்கொண்டிருக்கும் பொழுது வலுவில் தாமாகவே வந்து ஶாஸ்திரத்தில் பெரியோர்களுக்குச் செய்ய வேண்டியதாக ஏற்படுத்தப்பட்ட மர்யாதைகளுடன் எதிர்கொண்டு வந்தார் என்பதினல் டம்பனுடைய உத்கர்ஷம் சொல்லப்பட்டதாகிறது.

(3) வைராக்யத்தை நிரூபிக்கும் ப்ரகரணத்தில் ப்ரபோத சந்திரோதயத்தில் 'ஸ்திரீகளை நினைப்பதும் வைராக்யத்தைக் கெடுத்துவிடும்' என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இங்கு அந்த ஸ்திரீகளை அவர்களுடைய தோஷங்களை நிரூபிப்பதற்காக நினைப்பதும் வைராக்யத்தைப் போக்கடிக்கும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி மற்றும் பல இடங்களிலும் கண்டு கொள்வது.

இவை கேவலம் உதாஹரணத்திற்குமாத்திரம் காட்டப்பட்டன ஒவ்வொரு அர்த்தத்திலும், பதப்ரயோஜனதிகளிலும் இக்ரந்தம் ப்ரபோத சந்திரோதயத்தை விட உத்க்ருஷ்டமானது என்பது நன்கு புலப்படும். க்ரந்தம் விஸ்தரிக்குமென்கிற பயத்தினல் இவ்வளவுடன் நிறுத்தப்படுகிறது. இக்ரந்தம் நாடகலக்ஷணங்கள் ஸம்பூர்ணமாக அடங்கியதென்பதும், ஸம்ஸ்க்ருதபதங்களின் அமைப்புமுதலியவைகளில் மிகவும் ஶ்ரேஷ்டமானது என்பதும், நடையில் அதிலளிதமானதென்பதும் ஸுப்ரஸித்தமாகையினல் இங்கு எழுதப்படவில்லை.

இதில் மனிதர்களின் குணங்களுக்குள் விவேகம் ஶாந்தி தாந்தி முதலியவைகளை ஒரு வகுப்பாகவும், மோஹம் காம க்ரோதம் முதலிய கெட்ட குணங்களை மற்றொரு வகுப்பாகவும் நிரூபித்து, இவ்விரண்டு வகுப்பினருக்கும் ஆதாரமான ஜீவாத்மாவிற்கு மோக்ஷத்தை உண்டுபண்ண வேண்டும் என்று விவேகத்தைச் சேர்ந்த வகுப்பினரும், அவனை ஸம்ஸாரத்திலேயே இருக்கும்படி செய்ய வேண்டுமென்று மோஹனுடைய வகுப்

கிரந்தஸங்க்ரஹம்.

பினரும் விவாதப்பட்டுக்கொண்டு விவேகம் தத்வஜ்ஞானத்தை உண்டுபண்ணி அதினல் காமக்ரோதாதிகளை ஜயித்துப் பகவானிடத்தில் பக்தி உண்டாகும்படி செய்து அந்தப்பக்தி யோகத்தினல் உண்டாகிய பகவானுடைய க்ருபையினுல் உண்டாக்கப்பட்ட அந்தப் பகவானுடைய ஸங்கல்பத்தினல் ஆத்மாவை மோக்ஷத்தைஅடையும்படிசெய்கிறது என்கிற வேதாந்தார்த்தம் நாடகரூபமாகக் காண்பிக்கப்படுகிறது.

இதில் முதல் அங்கத்தில் பகவானே பரதேவதை, அவனே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியவன், அவனே ஆஸ்ரயிப்பதே மோக்ஷத்திற்குக் காரணம், எவ்வளவு பாபியாயிருந்தபோதிலும் பகவானே ஆஸ்ரயித்து அவனுடைய அனுக்ரஹத்தினல் மோக்ஷத்தை அடைய முடியும் என்கிற ஸித்தாந்தார்த்தங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது அங்கத்தில் இப்படிப்பட்ட தன்னுடைய ஸித்தாந்தமே வாஸ்தவமானதென்று ஸ்தாபிப்பதற்காக இதற்கு விரோதமாக மற்ற ஸித்தாந்திகளினுல் சொல்லப்படும் அர்த்தங்கள் ப்ரமாணங்களுக்கும் யுக்திகளுக்கும் விரோதமாயிருக்கின்றன என்று நிரூபிக்க ஆரம்பித்து பௌத்தம் ஜைனம் ஸாங்க்யம் பாசுபதம் காணுதம் குத்ருஷ்டி என்கிற மதங்களை நிராகரித்துப் பாஞ்சராத்திர ஶாஸ்திரத்தின் ப்ராமாண்யத்தையும் ஸ்தாபித்திருக்கிறார்.

மூன்ருவது அங்கத்தில் விவேகம் ராகத்வேஷங்களைப் போக்கடித்து விரக்தியையும் விஷ்ணுபக்தியையும் உண்டாக்குகிறது என்கிற க்ரமத்தையும், அந்த வைராக்ய விஷ்ணுபக்திகள் உண்டாவதற்குக் காரணத்தையும் நிரூபித்து இவை எல்லாவற்றிற்கும் காரணம் பெரியோர்களின் ஸஹவாஸம் என்பதையும் நிரூபித்து,புருஷனை மோக்ஷோபாயத்தில் ப்ரவர்த்திக்கும்படி செய்யும் க்ரமம் நிரூபிக்கப்படுகிறது.

நாலாவது அங்கத்தில் காமம் கோபம் த்ருஷ்ணை முதலியவைகள் இப்படி உண்டான விஷ்ணு பக்தியைக் கலைக்க ஆரம்பிக்கும் ஸமயத்தில் விவேகத்தின் பலத்தினல் அவைகளை ஜயிக்க வேண்டுமென்று நிரூபித்து அதன் இடையில் அந்தந்தக் குணங்களின் ஸ்வபாவத்தையும் விஸ்தாரமாக நிரூபித்திருக்கிறார்.

ஐந்தாவது அங்கத்தில் காமக்ரோதாதிகளை ஜயித்தாலும் டம்பம் தர்ப்பம் முதலியவைகள் கலைக்க ஆரம்பிக்கும், அப்பொழுது மோஹாதிகள் தானே உண்டாய்விடும் என்பதை நிரூபித்திருக்கிறார்.

ஆறாவது அங்கத்தில் பக்தியோகம் செய்வதற்கு உசிதமான ஸ்தானங்கள் பகவான் ஸாந்நித்யம் செய்திருக்கும் ஸத்வோத்திர க்ஷேத்திரங்களும், பாகவதோத்தமர்கள் வஸிக்கும் க்ஷேத்திரங் களும் என்றருளிச் செய்திருக்கிறார்.

ஏழாவது அங்கத்தில் இப்படி த்யானம் செய்வதற்குத் தகுந்த வஸ்துவும் கர்ம பரவசர்களாய் அசுத்தர்களான ப்ரும்மா முதலியவர் கள் அல்ல, அந்தப் பரமாத்மாவின் திவ்ய மங்கள விக்ரஹமும் அவ தார ரூபங்களுமே என்று நிரூபித்திருக்கிறார்.

எட்டாவது அங்கத்தில் இப்படிப்பட்ட த்யானத்தின் மஹிமை யோடு சேர்ந்த விவேகத்தினால் மஹாமோஹம் முதலியவைகள் நாச மடையும் என்பதை நிரூபித்திருக்கிறார்.

ஒன்பதாவது அங்கத்தில் ஸமாதி மேல்மேலென வளர்ந்து வரும் ப்ரகாரத்தையும், அதற்குக் காரணமாக ஆசார்ய கடாக்ஷம் அவஶ்யம் வேண்டும் என்பதையும் நிரூபித்திருக்கிறார்.

பத்தாவது அங்கத்தில் அந்தப் பரபக்தியினால் பகவானுடைய க்ருபை இவன் விஷயத்தில் உண்டாகி, அப்படி ப்ரஸந்நனான பகவா னுடைய ஸங்கல்பத்தினால் இந்த ஜீவாத்மா புண்ய பாபங்களைக் கழித்து அர்ச்சிராதிகதியினால் பரமபதத்தை அடையும் ப்ரகாரத்தை விஸ்தாரமாய் அருளிச் செய்திருக்கிறார்.

இப்படிப் பஹுமுகமாக க்ரந்தத்தினாலும், அனுஷ்டானத்தினாலும் ஸித்தாந்தத்தின் ப்ரதா வேதாந்த ஸித்தாந்தத்தை நிலை நிறுத்தின னக் கோள்கைகள் இவருடைய ப்ரதானக் கொள்கைகளாவன:- எல்லா ஜாதியரும் அவரவர்கள் ஜாதிக்குரியதாய் ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பகவானுடைய கட்டளைகளிவை யென் றெண்ணி அவைகளை அனுஷ்டிக்கவேண்டு மென்றும், அப் படி அனுஷ்டிக்கும்போது பகவத்ப்ரீதி ஒன்றையே பலமாக உத்தேசி த்துத் தன் ஶக்திக்கு அனுகுணமாகச் செய்யவேண்டும் என்றும், ஒரு காலத்திலும் ஶக்தி இருக்கும் பொழுது அவைகளை விடக் கூடாது என்றும், இப்படித் தங்கள் தங்கள் வர்ணாஶ்ரமங்களுக்கு அனுகுணமான காரியங்களைச் செய்து வருபவர் எந்த ஜாதியரேனும் ஶரணாகதி யென்றும் ப்ரபத்தி என்றும் சொல்லப்படுகிற உபாயத்தை

அனுஷ்டித்து மறு ஜன்மம் இல்லாமல் பரம புருஷார்த்தமாகிற மோக்ஷத்தை அடையலாம் என்றும், ப்ரபத்திக்குப் பிறகும் ஶாஸ்திரத்திற்கு வசப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அப்படி நடக்கத்தவறினல் பகவந் நிக்கிரஹ முண்டாகும் என்றும், அப்படி அது உண்டானல் ப்ராயஶ்சித்த முகத்தாலும் லகுஶிக்ஷையினாலும் நிவ்ருத்தமாய்ப் பரமபுருஷார்த்தம் கிடைப்பதற்குத் தடையாகாது என்றும், பகவானிடத்தில் பக்தியுடையவர்கள் எந்த ஜாதியராயினும் அவர்கள் விஷயத்தில் ஶாஸ்திர ஸம்மதமான மானஸ கௌரவாதிகளில் குறைவு செய்வது பகவதபசாரமாகும் என்றும், பாகவத கைங்கர்யம் இவனுக்கு பகவத்கைங்கர்யத்தின் எல்லை நிலம் என்றும், ஆகையினல் அதுவே ப்ரதானமாய் இவனல் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆக இத்தால் மிகவும் ஸங்க்ரஹமாக அறிந்துகொள்ளவேண்டியதாய்எல்லாத்தசையிலும் லக்ஷ்மியுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை யென்றும், அவனிடத்தில் ப்ரபத்தி செய்வதே பரம ஹிதம் என்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கும் அர்த்தம் இக்ரந்தத்திலும் 'ஸர்வஜ்ஞாகாஹ:' என்கிற ஶ்லோகத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையினல் இந்த க்ரந்தம் கேவலம் வேதாந்த ஶாஸ்திரமாயிருந்த போதிலும் ஸாதாரணமான ஜனங்களும் ப்ரத்யக்ஷமாக நாடக ரூபமாய்ப் பார்த்து ஸந்தோஷிக்கும்படி அருளிச்செய்யப்பட்டிருப்பதினல் ஸர்வோபகாரகமாகும் என்பதில் ஸந்தேஹமில்லை. இந்த நாடகத்தை இரண்டு தடவை சென்னையில் அபிநயித்துக் காட்டின ஸமயங்களில் அனேகம் ஜனங்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பு இதற்கு இருக்கவேண்டும் என்றிருந்த அபிப்ராயத்தை உத்தேசித்தும், ஸம்ஸ்க்ருத பாஷை தெரிந்தவர்களுக்கு மாத்திரம் உபயோகப்படக்கூடியதாய், அதிலும் ஶாஸ்திர ஜ்ஞானத்தையும் அபேக்ஷிக்கக் கூடியதான நிலைமையில் இருப்பதினலும், இதை எல்லாரும் அறிந்து அனுபவிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினலும் இதை ஆசார்யனுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டு தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்தேன். இதில் இருக்கும் தோஷாதிகள் மனுஷ்யனுக்கு ஸஹஜமான ஸ்வபாவத்தினல் ஏற்பட்டவை என்று நினைத்துக் குணங்களை மாத்திரம் க்ரஹித்து அங்கீகரிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

நிகமனம்.

சென்னை,
25—9—24.

தி. சே. நரஸிம்மாசார்யர்.

விஷய ஸூசிகை.

நாடக பாத்திரங்கள்.

ஸூத்திரதாரனும் நடியும்.

புருஷன் - *ஜீவாத்மா.*

ஸ்வேதத்வீபம் - *ராஜதானி.*

விவேகன் - *ராஜா.*

ஸுமதி - *ராணி.*

வ்யவஸாயன் - *ஸேநாபதி.*

ஶமன், த³மன் ஸ்வாத்யாயன், திருப்தி - *விவேக மந்திரிகள்.*

குருஶிஷ்யர்கள் - *ஸித்தாந்த வாதிகள்.*

தர்க்கன் - *ஸாரதி.*

ஸம்ஸ்காரன் - *ஶில்பி.*

த்ருஷ்டப்ரத்யயன் - *தூதன்.*

தும்புரு நாரதர்.

ஸங்கல்பன், விஷ்ணுபக்தி - *பகவானுடைய வேலைக்காரர்கள்.*

புத்தி - *புருஷனுடைய பத்னி.*

ஶ்ரத்தை, விசாரணை - *வேலைக்காரிகள்.*

மைத்ரீ, கருணை, முதிதா, உபேக்ஷா - *ஸுமதியின் ஸகிகள்.*

ஜுகுப்ஸை, விரக்தி, துஷ்டி திதிக்ஷை, ஆத்மவித்யை, அதிக த்ருஷ்டி, ஶாந்தி, ஸஹத்ருஷ்டி, ஸத்ருஶ த்ருஷ்டி. } *வேலைக்காரர்கள்.*

மாயா - *ராஜதானி.*

மஹாமோஹன் - *ப்ரதி நாயகன்.*

துர்மதி - *பத்னி.*

காமன் - ரதி, வஸந்தன், ராகன், த்வேஷன், க்ரோதன்-ஜிகாம்ஸை, லோபன், த்ருஷ்ணே, டம்பன் - குஹனே, தர்ப்பன்- அஸூயை.	*மஹாமோஹனுடைய மந்திரிகளும் அவர்களுடைய பத்னிகளும்.*

கஞ்சுகி - ஸ்தம்பன் - *வேலைக்காரர்கள்.*


ஸம்வ்ருதி ஸத்யன் - *தூதன்.*

அபிநிவேசன், துர்வாஸனே.

திவ்யவைதாளிகர்கள்.

வைநதேயர் (கருடன்.)

ஸாங்க்யாதி இதர ஸித்தாந்த வாதிகள்.



॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑍈𑌃 𑌅𑌨𑍁𑌗𑍃𑌹𑍀𑌤𑌂

॥ 𑌶𑍍𑌰𑍀 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑌯𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌂𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥

[illegible]
[illegible] 𑌯𑌸𑍍𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑌯𑌃 ।
[illegible]
𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 [illegible] 𑌦𑌾𑌨𑌾𑌯 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ (1)

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனருளிச்செய்த

ஸங்கல்பஸூர்யோதயம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் ஸ்ரீ உப.வே. நரஸிம்மாசார்யஸ்வாமி
அருளிச்செய்த தமிழ் மொழிபெயர்ப்பு.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

எந்த பகவானிடத்தில் (செய்யப்படுகிற) பக்தியின் வளர்த்தி யாகிற விடியற்காலத்தில் (உண்டாகிறதாயும்) இந்த ஜீவாத்மாவிற்கு

லக்ஷ்யே யத்ர * ச்ருதிதமநாக்ருஷ்டமௌர்வ்யாவதாநை:
ப்ரஸ்ருஷ்ட: ப்ரணவதநுஷா ஸத்வவத்பி: ப்ரயுக்த: |
ஜீவ்யோ வக்ஷ:ஸ்தலமதிஜலவா ப்ரத்யுஷ: கௌஸ்துபாத்மா
ஸஞ்சாராகாரஸ் ஸ பகவான் தயா க்ஷீரஸிந்து: ஸ்ரீப்ரியோ வ: ॥ (2)

[நாந்த்யந்தே ஸூத்ரதார:]

எல்லா வஸ்துக்களையும் அறிவதற்குத்தகுதியாயும், அன்றிக்கே பகவானை நேரில் பார்ப்பதற்குத் தகுந்ததாயும் இருக்கிற எந்தப்பகவானுடைய ஸங்கல்பமாகிற ஸூர்யோதயம் ஸம்ஸாரமாகிற ராத்திரியை வெகு சீக்கிரத்தில் போக்கடிக்கிறதோ அப்படிப்பட்டவராயும், அஸ்த்ரங்களாயும் ஆபரணங்களாயும் வடிவுகொண்ட எல்லாத் தத்வங்களாலும் அடையப்பட்டவராயும், தன்னிஷ்டத்துக்கு அடங்கிய அழிவில்லாத மேன்மையை உடையவராயும், லக்ஷ்மிக்குப் பதியாயுமிருக்கிற நாராயணன் எனக்கு எல்லா ஆபத்துக்களிலுமிருந்து தாண்டுவதற்கு (துணையாக) இருக்கவேண்டும். (1)

வேதங்களாலறியப்பட்ட (பகவானுடைய) குணங்களை மனதில் த்யானம் செய்வதில் செலுத்தப்பட்ட ஸாவதானத்தை உடையவர்களான அதிக ஸத்வகுண முடையவர்களால் * எந்தப் பகவானாகிற குறிப்பில் ப்ரணவமாகிற தனுஸ்ஸினால் ப்ரயோகிக்கப்பட்ட ஜீவாத்மாவாகிற பாணம் தன்னுடைய காந்திகளால் வ்யாபரிக்கப்பட்ட கௌஸ்துப ரூபியாய்க்கொண்டு (பகவானுடைய திருமார்பில் ப்ரகாசிக்கிறதோ அப்படிப்பட்டவராய், தயைக்கு க்ஷீரஸமுத்திரமாய் இருக்கிற லக்ஷ்மிக்கு மிகவும் அன்புள்ள நாயகனான பகவான் உங்களுக்கு ஸம்பத்தின் பொருட்டு (அதைக் கொடுப்பதற்குக் காரணமாக) இருக்கட்டும். (2)

[நாந்தீ ச்லோகம் முடிந்த பிறகு ஸூத்ரதாரன் ப்ரவேசித்துச் சொல்லுகின்றான்.]

---

* காது வரையில் அளக்கப்பட்ட நாண்கயிற்றை இழுப்பதில் வைக்கப்பட்ட ஸாவதானத்தை உடையவர்களான பலிஷ்டர்களினால் என்கிற அர்த்தம் இந்த முதல் பாதத்தினால் ஏற்படுகிறது. இத்தால் 'ப்ரணவம் தனுஸ்ஸு, ஜீவாத்மா பாணம், பரமாத்மா லக்ஷ்யம்' இத்யாதி அர்த்தமுள்ள ச்ருதிவாக்யம் விவக்ஷிக்கப்பட்டதாகிறது.

[illegible]

எல்லாத் தேவாஸுரர்களுடையவும் கிரீடங்களின் நுனிகளில் இருக்கிற ரத்னங்களின் கும்பல்களினுல் ஆலத்தி செய்யப்பட்ட பாதபீடத்தை உடையவராயும், சரணம் அடைந்தவர்களைக் காப்பாற்றுவதாகிற யஜ்ஞத்தில் தீக்ஷிததுக்கொண்டிருப்பவராயும், தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கிற லக்ஷ்மியினுல் சேர்ந்து அனுஷ்டிக்கப்பட்ட எல்லாத் தர்மங்களை உடையவராயும், ஸம்ஸாரமாகிய காட்டுத்தீயினுலுண்டாகிய வெப்பத்தைத் தணிப்பதற்கு மேகம் போன்றவராயும், எல்லாவற்றிற்கு மீச்வரனுயுமிருக்கிற பகவானுடைய ஸ்ரீரங்கம், திருமலை, காஞ்சிபுரம், திருநாராயணபுரம், புருஷோத்தமம், பாண்டுரங்கம், முதலிய (பகவான்) ஸாந்நித்யம் பண்ணியிருக்கும் திவ்ய க்ஷேத்திரங்களில் தங்கள் இஷ்டப்ரகாரம் யாத்திரோத்ஸவங்களை ஸேவிப்பதில் குதூஹலத்தினுல் செய்யப்படுகிற ஸஞ்சாரத்தினுல் நடந்துகொண்டிருக்கிற தாமரை புஷ்பங்கள் போன்றிருக்கிற திருவடிகளுடைய தூள்களின் கும்பல்களால் பரிசுத்தம் செய்யப்பட்ட பூமியின் ப்ரதேசங்களை உடையவர்களாயும், யாத்ருச்சிகமாக காவேரியின் தீவின் மத்யத்தை அடைந்தவர்களாயும், ஆதிசேஷன் விஷ்வக்ஸேனர், கருடன் இவர்களுக்கு ஸமானமானவர்களாயும், எல்லாஜனங்களாலும் கொண்டாடத்தகுந்தவர்களாயும், தோஷத்தின் வாஸனையும் கூட ஸம்பவிக்காதவர்களாயும், நல்ல ஜாதி, வித்யை இவைகளுக்குத்தகுந்த நல்ல ஒழுக்கம் ஸ்வபாவம்

[illegible]

[illegible]

[illegible] (3)

இவைகளினால் ப்ரகாசிப்பவர்களாயும், அநாதியான ப்ரக்ருதியாகிற பெரிய சுழலில் சுற்றிக்கொண்டிருக்கிற வேத பாஹ்யர்களாகிய வாதிகளாகிற வாழைத்தோப்பை முறிப்பதில் மதம் பிடித்த யானை போன்றவர்களாயும், அடைய வேண்டுமென்று இச்சிக்கப்பட்ட மோக்ஷமார்க்கத்தை உடையவர்களாயும், எல்லாத்திக்குகளின் மண்டலங்களுக்கு சிரோ பூஷணங்களாயும், உபநிஷத்துக்களில் சொல்லப்படுகிற ரஹஸ்யார்த்தங்களை உபதேசிப்பதற்கு ஆசார்யர்களாயும், அறியப்பட்ட எல்லாக்கலைகளின் ஸமூஹங்களையுடையவர்களாயுமிருக்கிற கொண்டாடத்தக்க பெரியோர்களினால் உத்தரவு செய்யப்பட்டவனாக ஆகிறேன். எப்படியென்னில் :—

எந்த நாடகத்தில், ப்ரமத்தை பொறுக்காத மனதை உடையவர்களுக்கும் ப்ரீதி உண்டாவதின் பொருட்டு ச்ருங்காரம் முதலிய மற்ற ரஸங்களின் ரூபத்தைத் தரித்துக்கொண்டதாயும், உயர்ந்த குணங்களை உடையதாயும் இருக்கிற ஒன்பதாவதாகிய சாந்தரஸம் இருக்கிறதோ அப்படிப்பட்டதாயும், ஸம்ஸாரமாகிற மார்க்கத்தில் வேகமாக நடக்கிற கணுக்கால்களை உடையவர்களான ஜனங்களுடைய எல்லாத் துக்கத்தையும் போக்கடிப்பதாயும், மனிதர்களுடைய குணங்களாகிற (அதாவது குணங்களின் வேஷத்தைத்தரித்துக் கொண்ட) நடர்களின் (நாட்யமாடுகிறவர்களின்) கும்பல்களை உடையதாயும் இருக்கிற அந்த நாடகத்தினால் பெரியோர்களுக்கு ஆநந்தத்தை வ்ருத்திசெய்—என்று. (3)

பரிக்ருஹீதா ச மயா பரதமதோபாத்யாயஸ்ய ஸந்மார்க்க வர்த்தநஸ்யாந்தேவாஸிந: ஸந்தோஷபாலக நாமதேயஸ்ய ஶைலூஷ சக்ரவர்த்திந: புத்ரேண ப்ரதிபடகரீந்த்ர கண்டீரவேண வைகுண்ட விஜேத்ரா நாம்நா ஸுக்ருதிஜநம் விஜ்ஞாபிதாஜ்ஞா ।

திவ்யப்ரயோக திதருக்ஷா தத்தக்ஷணா விசக்ஷணாஶ்ச ஸந்நிஹிதா: ஸாமாஜிகா: । ததாஹி—

ஸம்யகவகத நாட்ய தேஶிமார்கை-
ரஸஜீவித பராங்முகை ரஸீகை: ।
பரதாகம தைவதைர் விஶேஷா
பரிஷத் ஸம்ப்ரதி பாஸதே மஹத்பி: ॥ (4)

பரதமுனியின் மதத்திற்கு உபாத்யாயராகிய ஸங்மார்க்க வர்த்தனனுடைய சிஷ்யனாகிய ஸந்தோஷபாலகன் என்கிற பெயருடைய நடர்களின் சக்ரவர்த்தியின் புத்திரனும் விரோதிகளான நடர்களாகிற யானைகளுக்கு சிங்கம் போன்றவனுமாகிய வைகுண்ட விஜேதீ என்கிற பெயருடைய என்னால் பண்டிதர்களுடைய உத்திரவு ப்ரதிஜ்ஞையுடன் கூட அங்கீகரிக்கப்பட்டது. உயர்ந்த ப்ரயோகத்தைப் பார்க்க வேணு மென்கிற ஆசையினால் ஸாவதானர்களான பண்டிதர்களான ஸபிகர்கள் கும்பலாய்ச்சேர்ந்துவிட்டார்கள்.

அப்படியே

நன்றாக அறியப்பட்ட நாட்யம், தேசீ, மார்க்கம் * இவைகளை உடையவர்களாயும், லக்ஷணக்குறைவான நாட்யங்களில் பராங் முகர்களாயும், பரத ஶாஸ்திரத்துக்குத் தேவதைகள் போன்றவர்களாயும் இருக்கிற இந்த மஹான்களினால் இந்தஸபை இப்பொழுது மிகவும் ப்ரகாசிக்கிறது. (4)

---

* நாட்யம் என்பது கேவலம் நாயக நாயகீ பாவங்களை அபிநயிப்பது. தேசி என்பது தாளம் லயம் இவைகளை அனுஸரித்து பாவமில்லாமல் அவயவங்களை மாத்திரம் அசக்குதல். மார்க்கம் என்பது பாவங்களின் அபிநயமும், தாளங்களையும், அனுஸரித்து நர்த்தனம் செய்தல்.

[illegible]

[illegible] (5)

([illegible])

[illegible] (6)

ஆகையினால் நான், எல்லா வித்யா ஸ்தானங்களாகிற செல்வத்தை அடைவிக்கக் கூடியதாயும், இதற்குமுன் இல்லாத அநேக விசித்ரங்களான வேஷங்களைத் தரித்தபோதிலும், ஒளிக்கப்படாத மேன்மையுடையதாயும், அஜ்ஞானமாகிற ஸமுத்திரத்தினால் தன்வயிற்றை நிரப்புகிறதாயும், வேறொருவரிடத்திலும் செலுத்தப்படாத பக்தியை வ்ருத்தி செய்யக்கூடியதாயும், எல்லா வஸ்துக்களுக்கும் ஆதியாயு மிருக்கிற தேவதையை அடைகின்றேன்.

மனத்திற்குள் இருக்கிற (அஜ்ஞானமாகிற) ராத்திரிக்கு ஒப்பற்றதாகிய கிழக்குத்திக்கிலுண்டாகிற ஸந்த்யையாயும், ஜ்ஞானமாகிற கண்ணுக்கு இதற்கு முன்பில்லாத மையினால் உண்டாகிற சோபையாயும் வேதங்களெல்லாம் முதலில் சொன்னதாயும், குதிரையின் முகம்போன்ற முகத்தை உடையதாயும், வாகீசன் என்று பெயருடையதாயுமிருக்கிற வாஸுதேவனுடைய ரூபம் எனக்கு ப்ரகாசிக்கட்டும். (5)

(கைகளைக் கூப்பிக்கொண்டு) எவருடைய தனித்தனியான பூர்வங்களில் தானும் அதற்குத்தகுந்த பாவங்களை அடைந்தவராய்,

(𑌈𑌷𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾, 𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑌭𑌿𑌨𑍀𑌯, 𑌸𑌹𑌰𑍍𑌷𑌂)
𑌸𑍋𑌽𑌹𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌸𑍍𑌵𑌾𑌧𑍀𑌨𑌸𑌕𑌲𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌦𑍇𑌵𑌤𑌯𑌾 𑌦𑌯𑌯𑌾 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑌃।

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌕𑍇𑌲𑌿𑌵𑌿𑌲𑌾𑌸𑌜𑍁𑌷𑌾 𑌧𑌿𑌯𑌾
𑌸𑌵𑌾𑌸𑌿𑌤𑌾𑌮𑌿𑌹 𑌨𑌾𑌟𑌕𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌂 ।
𑌮𑍁𑌹𑍁𑌰𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌵𑌿𑌵𑍇𑌕𑌮𑌹𑍀𑌭𑍁𑌜𑌂
𑌮𑌤𑌮𑍁𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌂 ॥ (7)

(𑌨𑍇𑌪𑌥𑍍𑌯𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌮𑌵𑌲𑍋𑌕𑍍𑌯) 𑌆𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌤𑌾𑌵𑌦𑌿𑌯𑌮𑌾𑌰𑍍𑌯𑌯𑌾 𑌰𑌙𑍍𑌗𑌭𑍂𑌮𑌿𑌃 ।

எவனுடைய தர்மங்களாலே தானும் தர்மங்களை உடையவளாய், அனேகம் விதமான ஆகாரங்களையுடைய நாயகியும் விளையாடுகிறளோ அப்படிப்பட்டவராயும், பத்து விதமாக வேஷங்களைத் தரித்துக்கொண்டு ஸ்ரீரங்கம் என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில், அன்றிக்கே நர்த்தனம் செய்யும் இடத்தில் அடையப்பட்ட பூர்ணமான ஆநந்தத்தையுடைய பக்திமான்களால் அன்றிக்கே ரஸிகர்களினால் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கப்பட்டவராயும் இருக்கிற தேவன் நமக்கு மங்களத்தைச் செய்யட்டும். (6)

(சற்றுநேரம் நின்று த்யானத்தை அபிநயித்து ஸந்தோஷத்துடன்) அப்படிப்பட்ட நான் இப்பொழுது தன்னிஷ்டப்படி நடக்கிற எல்லாவஸ்துக்களினுடையவும் ஸ்திதியையுடைய ஸ்வதந்திரனை தேவதையின் க்ருபையினுல் கடாக்ஷிக்கப் பட்டேன்.

வேதாந்தங்களில் விளையாட்டை அடைந்து கொண்டிருக்கிற புத்தியினுல் வாஸனையோடு கூடியதாகச் செய்யப்பட்ட நாடகத்தின் மார்க்கத்தை இப்பொழுது அடிக்கடி நினைத்துப்பார்த்துப்பகுத்தறிவை ஊன்றுகோலாக வைத்துக்கொண்டு, அன்றிக்கே விவேகன் என்கிற ராஜாவை முக்கியமாக வைத்துக்கொண்டு, வித்வான்களின் மதத்தை உத்க்ருஷ்டமாகச் செய்கிறேன். (7)

(நடர்களிருக்கும் இடத்தை மறைத்துக் கொண்டிருக்கும் திரையைத் திரும்பிப்பார்த்து) பெரியவளாகிய உன்னால் இப்பொழுது இந்த ரங்கஸ்தலம் ஆதரிக்கத்தக்கது.

[ப்ரவிஶ்ய நடீ]

ஆர்ய, இயமஸ்மி, ஆஜ்ஞாவிதேயவஶம்வதா, அநந்யாவஶி
ஷ்டகர்மணா । (ஸாஸூயம்) ஆர்ய, அநுஶாதி, ஆஜ்ஞாப்ரியம் ப்ரிய
ப்ரேஷணே பரிஜந: ।

ஸூத்ரதார: — அபி நாம ஸகலாவயவ ஸாத்விக ஸம்ருத்தா நா
டகஸ்யாஸ்ய ஸம்ப்ரதி ஸமுசிதா பரிஷத் ஸஹ்ருதய
கௌஶலா: குஶீலவா: ?

நடீ — கர சரண ஸ்தாநீயா: அநேந ஸம்ப்ரதி ஸ்வ
ஹ ஸ்திதிரேவ ஸம்ஸ்தி? அதஸ்து ப்ருச்சாமி கிம்
நாமகம் கீத்ருஶம் நாடகம் அபிநயம் ஆரப்ஸ்யதி? (ஸோ)
கரசரண ஸ்தாநீயா: ஸர்வேஷு கார்யேஷு ? கிம் ந த்வரந்தி
கார்யே? இதம் து ப்ருச்சாமி? கிம் நாமகம் கீத்ருஶம்
நாடகம் ப்ரயோக்தும் ஆரப்தமிதி ?

[நடி ப்ரவேசித்துச் சொல்லுகிருள்.]

ஆர்ய (பெரியவரே)! இதோ இருக்கிறேன். உம்முடைய உத்தி
ரவையே மிகவும் ப்ரியமாக எண்ணுகிற இந்தப் பரிஜனம்
உத்திரவு செய்யப்படட்டும்.

ஸூ — ஸமர்த்தர்களான நடர்கள் ஸத்வகுணம் நிறைந்த ஸபி
கர்களால் உத்திரவு செய்யப்பட்ட நாடகத்தை நடத்துவத
ற்கு உசிதமான வேஷங்களைப் போட்டுக் கொள்வதில் ப்ரயத்தி
னம் செய்கிறார்களா ?

நடி — இவர்கள் தங்களுக்கு கைகால்கள் இவைகளுக்கு ஒப்பானவர்
களல்லவா? உம்முடைய இஷ்டத்தில் என் த்வரை செய்யமாட்
டார்கள்? ஆனாலும் இதை மாத்திரம் கேட்கிறேன். என்ன
பெயருடைய தாய் எப்படிப் பட்டதான நாடகம் அபிநயஞ்
செய்ய ஆரம்பிக்கப்பட்டது? — என்று.

सूत्र—आर्ये! किं न जानासि सङ्कल्पसूर्योदयाख्यं नायकीकृतविवेकं नवीनं नाटकम्?

[illegible]

[illegible] (8)

कविः

[illegible]

[illegible] (9)

[illegible]

ஸூ—ஆர்யே! ஸங்கல்ப ஸூர்யோதயம் என்று பெயருடையதாய் நாயகனாகச் செய்யப்பட்ட விவேகனை உடையதாகிய புதியநாடகத்தை நீ அறிந்திருக்கவில்லையா?

எந்த நாடகத்தில் ப்ராணிகளின் நல்லது கெட்டது என்கிற ஸ்வபாவமுடைய குணங்கள் தங்கள் தங்களுக்கு அனுகுணங்களான தேவதைகளின் ரூபமாக நடர்களாக வருகின்றனவோ அப்படிப்பட்ட இந்த நாடகத்தில் உயர்ந்தது, தாழ்ந்தது, இவற்றைப் பகுத்தறிந்தவர்களான புத்தியையேதனமாக உடையவர்கள் உயர்ந்த குணங்களை உடையதாயும் புதிதாயுமிருக்கிற சேர்க்கையை உடையதான அபிப்ராயத்தைத்தெரிந்து கொள்ளுகிறார்கள். (8)

மேலும்

விவேகமஹாராஜாவின் ஸாமர்த்யத்தினால் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற யுத்தவீர ரஸத்தின் ஸம்பந்தத்தை யுடையதாயும், பரமாத்மாவின் சரித்திரத்தினால் ப்ரகாசம் செய்யப்பட்ட தயாவீர ரஸத்தின் மஹிமையை யுடையதாயும், ஜ்ஞானியாகிய ஜீவாத்மாவின் ஸ்திதியினால் சேர்க்கப்பட்ட ஶாந்தி ரஸத்தின் ஸ்வரூபத்தை யுடையதாயுமிருக்கிற உசிதமான இந்த ப்ரயோகம் ஸம்ஸார ஸுகத்தை அனுபவிப்பவர்களுக்கும் ப்ரியமாக ஆயிற்று. (9)

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (10)

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (11)

இந்த நாடகத்தின் மேன்மையைச் சொல்லுவதில் அளவை நான் நினைக்கவில்லை. ஸமுத்திரத்தில் எவ்வளவு ஶங்குகள் இல்லை. அவைகள் எல்லாம் புருஷோத்தமனுடைய தாமரைப் புஷ்பங்கள் போன்ற திருக்கைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கிற பாஞ்சஜந்யமாகுமா? மேலும்

கொஞ்சம் கொஞ்சமாக உண்டாகிற காந்தியாகிற கவசங்களை உடைய எந்த ரத்னங்கள் இப்பொழுது லோகங்களை மோசம் செய்கின்றனவோ அப்படிப்பட்ட ரத்னங்கள் தனிகர்களின் க்ருஹங்களில் இருக்கட்டும்; அவைகளால் என்ன ப்ரயோஜனம்? இது யோசிக்கப்படட்டும். மிகவும் புராதனங்களான ஸ்யமந்தகம் முதலிய ரத்னங்களும் ஸ்ரீவத்ஸ மென்கிற மருவாகிற கூச்சுப் பெரையில் வைக்கப்பட்ட தீபத்தைப்போன்ற அழகுடையதாயும், லக்ஷ்மியின் விளையாட்டுக்குபயோகிக்கக் கூடிய கண்ணாடியாகவும் இருக்கிற கௌஸ்துபத்துடன் ஏதாவது ஒன்று சேர்த்துச் சொல்லப்படுகிறதா என்ன? இந்தக் காரணத்தினாலும் இந்த நாடகம் மிகவும் பஹுமானம் செய்யத்தக்கது.

வேதங்களில் ப்ரஸித்தமான ஆசார்யனாயிருக்கும் தன்மையுடையவரான அதிக தயையுள்ளவரான கவியினால் ஏதோ ஒன்றை

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

வ்யாஜமாக வைத்துக்கொண்டு * எல்லா ப்ராணிகளையும் காப்பாற்றுவதற்காக நன்ருகப்பிரிக்கப்பட்ட நன்மை,தீமை,இவைகளையுடைய இந்த ப்ரயோகம் செய்யப்பட்டது. 11

நடீ—ஆர்ய! எந்தக் கவியினுடைய ப்ரயோகம் இது, எந்தக்கவியினிடத்தில் கௌரவத்தினுல் இந்தஸபை நம்மிடத்திலும் காண்பிவிக்கப்பட்ட விச்வாஸத்தை உடையதா யிருக்கிறதோ ?

ஸூ—இது உனக்கு (உன்னால்) கேட்கப்பட்டதில்லையா ?

---

* ‘கிமபி அபதிச்ய’ என்பதினுல் இந்த நாடகம் ப்ரபோத சந்திரோதயம் என்கிற நாடகத்துக்குக் கண்டனமாக அருளிச்செய்யப்பட்டது என்பது குறிப்பிடப்பட்ட தாகிறது. ‘அபதிச்ய’ என்பதினுல் அதுஸரியான காரணமல்ல என்பதும், அர்ஜுநனை வ்யாஜமாகக்கொண்டு ஸ்ரீகீதோபதேசம் செய்யப்பட்டாப்போலே அது கேவலம் வ்யாஜம் மாத்திரம் என்பதும், ஸர்வலோகத்தையும் ரக்ஷிக்க வேண்டும் என்பதே முக்ய காரணம் என்பதும், ‘கிமபி’ என்பதினுல் இந்த நாடகத்துக்கு அது பூர்வபக்ஷமாக எடுத்துச்சொல்லக்கூட யோக்யதை யற்றது என்பதும், ‘நிகமாந்தேஷு நிரூடகௌரவேண’ என்பதினுல் உபயவேதாந்தங்களிலும் தமக்கு ஆசார்யத்வம் எல்லாலோகங்களிலும் ப்ரஸித்தம் என்பதும் வேதாந்தங்களுக்கே நல்ல மார்க்கத்தைத் தெளிவிக்கக்கூடியவ ரென்பதும் ஸூசிப்பிக்கப் படுகிறது.

கவிவர்ண

ஊகூஓமொகூ ஸம்ஸாவநீயஸ்ய விஶ்வாமித்ராயிணோ விஶ்வா
மித்ர கோத்ர ஐஷண ஸ்யவிஶ்ஸவித்யா ஸிஹாரவஞ்ஜு
ரீகஸ்ய வஞ்ஜரீகாக்ஷ வொபஸோ த்ஸம்ஸவஸ்யா நக்ஷ ஞண
ஶேவதெ ரநக்ஷஸூரெ ராத்ஞ ஸம்ஸவ: ஸ்ரீரங்
ராஜதிவ்யாஜ்ஞாலப்த வேதாந்தாசார்ய வத:, கவிதா
ர்க்கிக ஸிம்ஹ இதிப்ரஸ்யாத ஞண ஸநாதஸ்ய:, ஊா
ஞ ஜந நிபஜநெஜைத்ரயஜ்ஞ வஸாயித தஶதிஶா ஸளய:
ஸவர்தந்த்ர ஸங்கட ப்ரஶமந விஶங்கட மதி:

ஸ்ரீமாந் வெங்கடநாதோ நாம கவி:

எல்லா லோகங்களாலும் கொண்டாடத் தகுந்தவராயும், எல்லாரையும்விட மேற்பட்டவராயும், விஶ்வாமித்திர கோத்திரத்திற்கு அலங்காரமாயும், பரிசுத்தங்களான வித்தைகள் விளையாடுவதற்குத் தாமரைப்புஷ்பங்கள் போன்றவராயும், புண்டரீகாக்ஷர் என்றுபேர் கொண்ட ஸோமயாகம் பண்ணினவரின் புத்திரருமாகிய எண்ணிறந்த குணங்களுக்கு இருப்பிடமாகிய அநந்தஸூரியின் திருக்குமாரராகியும், ஸ்ரீரங்கநாதனுடைய திவ்ய நியமனத்தினால் அடையப்பட்ட வேதாந்தாசார்யர் என்கிற பெயரை உடையவராயும், கவிதார்க்கிக ஸிம்மம் என்று ப்ரஸித்தமான குணத்தினலேற்பட்ட பெயரையுடையவராயும், ஶிஷ்ய ஜனங்களாகிற கட்டப்பட்ட ஜயத்தை அறிவிக்கக்கூடிய கொடிகளினால் அலங்கரிக்கப்பட்ட பத்துத் திக்குக்களாகிய மைத்தைகளை உடையவராயும், எல்லா ஶாஸ்திரங்களின் விரோதங்களைப் போக்கடிக்கக்கூடிய விஶாலமான புத்தியை யுடையவராயுமிருக்கிற ஸ்ரீமத்வேங்கடநாதன் என்கிற பெயர்கொண்டகவி இருக்கிறாரல்லவா?

𑌗𑍌𑌡𑌵𑍈𑌦𑌰𑍍𑌭𑌪𑌾𑌞𑍍𑌚𑌾𑌲𑌰𑍀𑌤𑌿𑌸𑍍𑌰𑌜𑌂 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 ।
𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑌾𑌰𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌿𑌨𑌃 ॥ (12)

𑌅𑌨𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌂 𑌜𑌗𑌦𑌨𑌨𑍍𑌯𑌦𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌂 𑌵𑌾
𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌕𑍍𑌷𑌮𑍋 𑌕𑌵𑌿𑌰𑌮𑍁𑌷𑍍𑌯 𑌯𑌦𑌨𑍍𑌵𑌵𑌾𑌯𑍇 ।
𑌜𑌨𑍍𑌮 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍃𑌷𑌿𑌭𑌿𑌃 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌯𑌦𑌸𑍍𑌯𑌾
𑌦𑍇𑌵𑍀 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌜𑌨𑌨𑍀 𑌯𑌦𑌨𑍍𑌵𑌯𑌗𑍋𑌤𑍍𑌰𑌾 ॥ (13)

𑌅𑌪𑌿 𑌚

எந்தக்கவியினுடைய * கௌட வைதர்ப்ப பாஞ்சால என்கிற ரீதிகளினால் கலந்து செய்யப்பட்ட மாலை போலிருக்கிற வாக்கை, வாஸனையைத் தெரிந்துகொண்ட பெரியோர்கள் எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்கிறார்களோ? (12)

இந்தக்கவி † இந்த லோகத்தை வேறு இந்திரனுடையதாகவும், வேறொரு லோகத்தை இந்திரனில்லாததாகவும் செய்யக்கூடிய யோக்யதையுள்ள வம்சத்திலே பிறந்தார். ரிஷிகளினால் எந்தக் காயத்ரியினால் இரண்டாவது பிறப்புச் சொல்லப்பட்டதோ அப்படிப்பட்ட லோகங்களுக்கு மாதாவாகிய காயத்ரீதேவீ எந்தக்கவியின் கோத்திரத்திலேயே பிறந்தவளோ. (13)

மேலும்

---

* 'கௌட' என்பது மிகவும் ம்ருதுவான பதங்களின் சேர்க்கையினால் அமைக்கப்பட்டது. 'வைதர்ப்ப' என்பது மிகவும் கடினங்களான பதங்களின் சேர்க்கையினால் அமைக்கப்பட்டது. 'பாஞ்சால' என்பது அதிகக்கடினமும் அதிக ம்ருதுவும் இல்லாத பதங்களின் சேர்க்கையினால் அமைக்கப்பட்டது.

† ஸ்ரீமத் ராமாயணத்தில் '𑌅𑌨𑍍𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿' இத்யாதி விச்வாமித்திரருடைய வார்த்தை இங்கு ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. இந்த லோகத்துக்கு வேறொருவனை இந்திரனாகவாவது, வேறொரு லோகத்துக்கு வேறொருவனை இந்திரனாகவாவது, இந்த லோகத்துக்கு இந்திரனில்லாமலாவது, வேறு லோகத்துக்கு இந்திரனில்லாமலாவது செய்யப்போகிறேன் என்று அவர் சொன்னது இங்கும் துல்யம் என்றறியத்தக்கது.

[illegible] (14)

[illegible]

[illegible] (15)

[illegible]

தேவதைகளுக்கு சத்ருக்களாகிய அஸுரர்களுடைய கும்பல்களுக்குப் பயத்தை உண்டுபண்ணக் கூடியதாயும், ப்ரும்மாவினால் பகவானுக்கு ஆராதனம் பண்ணும் பொழுது அடிக்கப்பட்டதாயும் (உபயோகிக்கப்பட்டதாயும்) இருக்கிற பகவானுடைய கண்டை எந்தக்கவியின் ரூபமாக அவதரித்தது என்று யுக்திகள் அதிகமாயிருப்பதைக்கொண்டு வித்வான்களால் ஊஹிக்கப்படுகிறதோ. (14)

அப்படிப்பட்டவர்

இருபது வயதிற்குள் விசேஷமாகக் கற்கப்பட்ட அனேகம் விதங்களான வித்யைகளை உடையவராயும், முப்பது தடவை (சச்சிஷ்யர்களுக்கு) கேட்பிவிக்கப்பட்ட சாரீரக பாஷ்யத்தை உடையவராயுமிருக்கிற ஸ்ரீமானுகிய வேங்கடநாதன் என்கிறகவி காதுக்கு இனிமையான அன்றிக்கே வேதங்களுக்கு நன்மையைக் கொடுக்கக் கூடியதான அனேகார்த்தங்களை உடைய இந்த நாடகத்தைப் பகவானுடைய ப்ரீதியின் பொருட்டுச் செய்தார். (15)

நடீ—ஆர்ய! எப்பொழுதும் வேதாந்தங்களின் கூட்டங்களிலேயே வைக்கப்பட்ட மனதையுடைய இந்தக்கவியின் மிகவும் கடினங்களான யுக்திகளாகிற வஜ்ராயுதங்களினால் பிளக்கப்பட்ட பாஹ

[illegible]

[illegible] (16)

[illegible]

ண்டர்களாகிற மரங்களின் கூட்டங்களையுடைய வாக்கு நம் போலியர்களின் விளையாட்டுக்குத் தகுந்ததான நாடகத்தை எப்படிச் செய்யக்கூடும்?

ஸூ—(மனத்திற்குள் பரிஹாஸத்துடன்) ஆர்யையாகிய நீ எந்த இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறுயோ அவைகளுக்குள் முதல் கேள்வையில் இந்த நாடகம் செய்தவரை ஒருவித ப்ரவ்ருத்தியுமில்லாத எல்லா இந்திரியங்களின் வ்யாபாரத்தை உடையவராயும், அனுபவம் ஒன்றிலேயே நோக்கத்தை உடைய மனதை உடையவராயும் மிகவும் அசங்காமலிருப்பதாகிய அவஸ்தை உடையவராயும் எண்ணுகிறாயா? அப்படி இருந்த போதிலும் ஸமாதானம் சொல்லுகிறேம்.

மனு, வ்யாஸர், வால்மீகி, இவர்களின் ஸபையில் சேரத்தகுந்ததான் அம்ருதத்தினுல் நனைக்கப்பட்ட இப்படிப்பட்ட வாக்குத் தானே ஒரு ஜனத்தினிடத்தில் ப்ரகாசத்தை அடைகிறதேயானுல் யார்தான் தடுக்கக்கூடியவர்கள்? (எப்படி என்னில்) ஸாயங்காலத்தில் நர்த்தனம் செய்கிற ருத்திரனுடைய விந்த்யபர்வதம்போல் விசாலமான ஜடையில் சுற்றிக்கொண்டிருக்கிற கங்கை நொண்டியின்பேரில் விழுகிறதேயானுல் யார் தடுப்பார்கள் (அதைப்போல) 16

மற்றொரு விஷயத்தையும் நீயோசிக்க வேண்டியது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible] (17)

[illegible]

[illegible]

[illegible] (18)

மலையைப் பிளப்பது முதலிய கார்யங்களில் கம்பீரமாயும் பயங்கரமுமான நடையை உடையதாயும் ருத்திரனுடைய தலையையும் ஆடும்படி செய்கிற கங்கை பூமியில் ருசியுள்ளதாயும் தெளிந்ததாயும், அழகாயுமிருக்கிற ப்ரவாஹங்களை ப்ரகாசம் செய்யவில்லையா என்ன? (17)

நட—(ஸந்தோஷத்துடன்) ஆர்யராகிற உம்முடைய இந்த வார்த்தை யுக்தமாகவே இருக்கிறது. ஆகிலும் சாந்தி என்று பெயருடைய ரஸம் இல்லை என்று கந்தர்வ சாஸ்திரத்தை உபதேசிக்கும் ஆசார்யர்களினால் நிரூபிக்கப்படுகிறதே? ஆகையினால் இந்த நாடகத்தில் அப்படிப்பட்ட ரஸத்தின் அமைப்பு எப்படிப் பொருந்தும்?

ஸூ—(அலக்ஷ்யமாயும் அதைக்காட்டாமல் மறைத்தும்) ஆர்யே! அவர்களை நான் பரதமுனியின் மதத்தின் கரையை யறிந்தவர்களாக எண்ணவில்லையல்லவா? (யோசித்து)

அதன்றியும் இந்த லோகத்தில் அப்படிப்பட்ட ஸபிகர்களை துர்லபர்களாக நினைத்து சாந்தி ரஸத்தினால் சந்தோஷப் படுத்துவது அன்றிக்கே சாந்திரஸத்தை அபிநயிப்பது சக்யமல்ல என்று நினைத்தார்கள் என்று ஸந்தேஹிக்கிறேன். (18)

[illegible]

[illegible] 19

[illegible]

மேலும்

ஸ்ருங்கார ரஸம் ஸபைக்கு உசிதமல்லாத ப்ரகாரத்தை அடைகிறது. வீர ரஸம் ஒருவர்க்கொருவர் அவமானத்தை உண்டாக்குகிறது. அத்புதரஸம் லோகத்திற்கு விருத்தமான நடையையுடையது. ஆகையினால் அல்பமான ஸாரம்சத்தை உடைய மற்றரஸங்களினால் போதும். சாந்தியோ வென்னில் போக்கடிக்கப்பட்ட மனதின் துக்கத்தையுடைய ரஸமாக மிகுதியாயிருக்கிறது. (19)

நட—ஸநகர் ஸநந்தநர் முதலிய ரிஷி ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்ட அப்படிப்பட்ட ஶாந்திரஸம் இருக்கட்டும். ஆகிலும் அசங்காத எல்லா இந்திரியங்களையும் உடையவர்களால் ஸம்பாதிக்கக்கூடிய யோகத்தை முக்யகாரணமாக உடைய இந்த ஶாந்தி ரஸம் எல்லா ஜனங்களாலும் பார்க்கத்தகுந்த நாடகக் கதையினால் எப்படி ஸம்பாதிக்கப்படுகிறது?

ஸூ—ஆர்யே! இப்படிச்சொல்லாதே, நாம் விடப்பட்ட எல்லாத் தர்மங்களையுமுடைய அலேபகர்களின் மதத்தை அபிநயிக்கப் போகிறதில்லையல்லவா, எந்தக் காரணத்தினால் இப்படி ஸங்

[illegible]

தேஹிக்கிருயோ? பகவானுகிய கீதாசார்யனுல் அனேகம் தடவை நிரூபிக்கப்பட்டவைகளாயும், ஸாத்விக த்யாகத்தினுல் அலங்கரிக்கப்பட்டவைகளாயும், நிவ்ருத்தி தர்மத்தின் மார்க்கத்தில் எப்பொழுதும் ஸம்பவிக்கக் கூடியவைகளாயுமிருக்கிற அனேகம் விதங்களான வ்யாபாரங்கள் இருக்கின்றன அல்லவா, எவைகளை அபிநயிப்பதினுல் நர்த்தகர்களுக்கு ஜீவனத்துக்கு இடமுண்டோ? மேலும் இப்படிப்பட்ட நாட்யத்தின் மஹிமையை நீ கேள், அல்லது யோசித்துப் பார். (ஶாஸ்திரத்தில்) கேட்கப்படுகிறதல்லவா!

எது நாடகத்தில் காணப்படுகிறதில்லையோ, அந்த ஶாஸ்திரம் ஶாஸ்திரமல்ல, அந்த வித்யை வித்யை அல்ல, அந்த சித்திரம் சித்திரமுமல்ல, அந்தக்கலைகள் கலைகளுமல்ல, அந்தயோகம் யோகமுமல்ல, அந்த ஜ்ஞானம் ஜ்ஞானமுமல்ல. 20

நடீ—உங்களால் மிகவும் செய்யத்தகாத கார்யம் ஆரம்பிக்கப் பட்டது. நானோவெனில் ஸ்திரீகளின் ஸ்வபாவத்தினுல் சலித்துக்கொண்டிருக்கிற மனதையுடையவளாய் த்வேஷமாகிற பிசாசினுல் பிடிக்கப்பட்டிருக்கிற ஶத்ருருக்களான பண்டித ஜனத்தினிடத்திலிருந்து பயத்தினுல் நடுங்கினவளாயிருக்கிறேன்.

सू — अलं कातर्येण । अद्य खल्वस्माकमभिमुखं भागधेयम् । तथाहि—

लक्षणसम्पत्तिरनवद्या रसपरिपोषश्च सहृदयग्राह्यः ।
संघटते नाटकेऽस्मिन् स एष शैलूषसुकृतपरि- [पाकः ॥

किंच

विद्यासम्पन्निधिरवहितो वेङ्कटेशः कवीन्द्रः
शिष्टः शश्वदभिनये दक्षः पात्रवर्गः ।
प्रख्यातेयं परिषदनघा पक्षपातानभिज्ञा
रामादीनां कुलधनमिदं रङ्गतां याति रङ्गम् ॥ 22

अन्यच्च भवता भावनीयम् ।

शमधननिधिं सत्त्वप्रायं प्रयोगमयोगिनः
स्वगुणवशतः स्तोतुं यद्वा प्रवृत्ता निन्दितुम् ।

ஸூ—பயந்ததுபோதும்! இப்பொழுது பாக்யம் நம்மைக்குறித்துத் திரும்பி இருக்கிறது. எப்படியென்னில்:—

இந்த நாடகத்தில் தோஷமில்லாத லக்ஷணங்களின் பூர்த்தியும் ஸஹ்ருதயர்களால் அறியக்கூடிய ரஸத்தின் புஷ்டியும் சேர்ந்திருக்கிறது என்கிற இது நடர்களின் புண்யத்தின் பரிபாகமே. 21

மேலும்—

வித்யைகளாகிற ஸம்பத்துக்களுக்கு நிதிபோல் இருப்பிடமான வேங்கடேஶர் என்கிற கவிஶ்ரேஷ்டர் மிகவும் ஸாவதானமுள்ளவர். என்னுடைய பாத்திரங்களின் கூட்டமும் வெகு காலமாக அபிநயத்தில் வ்ருத்தியடைந்த ஆரம்பமுடையது. தோஷமில்லாத இந்த ஸபையும் பக்ஷபாதம் செய்யத்தெரியாதென்று ப்ரஸித்தமாயிருக்கிறது. ராமன் முதலியவர்களுக்குக் குலதனமான இந்த ஸ்ரீரங்க க்ஷேத்திரம் நமக்கு நர்த்தனம் பண்ணும் இடமாயிருக்கையை அடைகிறது. 22

மற்றொன்றும் உன்னால் நினைக்கத்தக்கது.

ஶாந்தியைத்தனமாக உடைய ரிஷிகளுக்கு நிதிபோலிருப்பதாய் ஸத்வகுணம் நிறைந்ததான இந்த நாடகத்தை ஸத்வகுணமில்லாதவர்கள் தங்கள் தங்கள் குணங்களின் வஶத்தினால் ஸ்தோத்திரம் செய்வதற்காகவாவது தூஷிப்பதற்காகவாவது எடுத்துக்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கொள்ளட்டும். இவ்விஷயத்தில் அனேகம் வார்த்தைகளினுல் என்னப்ரயோஜனம்? நமக்குக்குறைந்து விட்டதென்ன? லோகம் ஈச்வரனை உடைத்தாகாததல்ல. அந்த ஈச்வரனுல் ஏற்படுத்தப் பட்ட பதினுறு * ஸாக்ஷிகள் எப்பொழுதும் ஸாவதானத்துடன் இருக்கிறுர்கள். 23

புத்திமான்களுக்குப் பொருமை முதலியவைகள் தங்களால் நினைக் கப்படாமல் வந்தபோதிலும் மின்னலைப்போல் உண்டாகிற காலத்திலேயே நிர்சயமான முடிவை உடையதுகள். அன் றிக்கே—

த்வேஷத்தினுல் வணக்கப் பட்டவர்களாய் மௌனத்தைவ ஹிக்கட்டும். அவர்களே ஸீக்கிரத்தில் நிர்சயமாக மழை கால த்தில் அரும்பெடுத்த கடப்பை மரங்களின் கதிர்கள் போன்ற ஸரீரத்தை உடையவர்களாயும், தாங்களே ஆட்டுவதினுல் அசங் கிக்கொண்டிருக்கிற தலைகளை யுடையவர்களாயும், கொஞ்சம் வெட் கத்துடன் கூடியதாய் பாதிமூடப்பட்ட கண்களை உடைத்தாயிருக் கும்படி தங்களுக்கும் வாயில்லாமல் உயர்முகமாகச் செய்யப் பட்ட முகங்களை உடையவர்களாயும் கொண்டு நம்முடைய ப்ர யோகத்தின் வழியினுடைய ரஸத்தினுடைய ஸாராம்சத்தின் மேன்மையின் எல்லையை ஸ்தோத்திரம் செய்யப்போகிருர்கள். 24

* ஸூர்யன், சந்திரன், காற்று, நெருப்பு, ஆகாசம், பூமி, ஜலம், (அவரவர்களின்) மனது, யமன், பகல், இரவு, இரண்டு ஸந்த்யைகள், தர்மம், ஆகிய இவை பதினுறும் ஸாக்ஷிகள் என்ற படி.

[illegible]

[illegible]

இடைவிடாமல் செய்யப்பட்ட த்வேஷத்தினால் சந்தில்லாமல் நிறைக்கப்பட்ட மனதை உடையவர்களாய் அதனால் ஒரு வித மாறுதல்களுமில்லாதவர்கள் இருந்தாலும் இருக்கட்டும். அப்படி இருந்தபோதிலும் இப்பொழுது எல்லாவிதத்தாலும்—

கம்பீரமான புத்தியையுடைய பரதமுனி தன்னுடைய பெயரினாலேயே குறிக்கப்பட்ட பாவம், ராகம், தாளம், இவைகளையுடையதாய், ஸாமவேதத்துக்கு உபவேதமாகிய எந்தக்கந்தர்வ வேதத்தை லோகத்தை ரக்ஷிப்பதற்காகச் சொன்னாரோ அதை அறிந்தவர்களினால் நாமும் நீக்கப்படாதவர்களாகிறோம். 25

நட— ஆர்ய! இது உசிதம் தான், ஆயினும் சாஸ்திரங்களைக் கேட்டிருப்பதினால் பெரியோர்களான அனேகம் பெயர்களான விரோதிகள் நம்மிடத்தில் தோஷத்தைத் தேடிக்கொண்டு இருக்கும் பொழுது நம்மால் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்ட விஷயம் தவறுதலில்லாமல் எப்படி நிறைவேற்றத்தக்கது?

ஸூ— அயி (அடி)! அயலாருடைய குணத்தைப்பார்த்து ஸந்தோஷிக்கிறவளே. சாஸ்திரங்களின் கேள்விகள் அதிகமாயிருப்பதில் உனக்கு என்ன இவ்வளவு நம்பிக்கை? அதன்றியு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 26

[illegible]

ம் நிச்சயிக்கப்பட்ட உண்மையான அர்த்தங்களை உடை யவர்களுக்கும் தங்களால் அறியப்பட்டதை உறுதிப்படுத்துவ தற்காக மேன்மேலும்கேள்விகள் உண்டாகின்றன. அது இரு ந்தால் இருக்கட்டும். தோஷமில்லாத வித்யைகளை உடைய வர்களை இப்பொழுது பஹுமானம் செய். (அப்படியே) காணப்படுகிறதல்லவா!

தோஷத்தோடு (களங்கத்தோடு) கூடிய அதிக வித்யைகளை (கிரணங்களை) அடைந்திருந்தும் ஒருவன் மெள்ள மெள்ளக்கு றைந்து விடுகிறான். களங்கமில்லாத ஒரு வித்யையினால் (கலையினால்) எவனாவது ஒருவன் வாக்கில் ஈச்வரனாயிருக்கையை (ருத்திரனாயிருக் கையை) அடைகிறான். (26)

ஆகையினால் நான் இப்பொழுது பராசரர், வ்யாஸர், முதலியவர் களினால் பஹுமானம் செய்யப்பட்டதாயும் அநாதரிக்கப் பட்ட கெட்ட ஜனங்களுடைய நடவடிக்கைகளை உடைய தாயும், இடைவிடாமல் பரிசயம் செய்யப்பட்ட கந்தர்வ சாஸ்திரத்தைக்கொண்டு ஸந்தோஷப்படுத்தியதினால் தன்னி டத்தில் அனுக்ரஹத்தை உடையவனாய்ச் செய்யப்பட்ட பரமாத்மாவை உடையதாயுமிருக்கிற இந்த ஸபை ஸாவதா னமாய் இருக்கும்படி செய்கிறேன்.

[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ॥ 27

[நேபத்யே]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 28

(வணக்கத்துடன் கையைக் கூப்பிக்கொண்டு) இந்த நாடகத்தில் விவேகமஹாராஜாவினுடைய தன் மதஸ்தாபனத்திலும், விரோதிகளின் மதங்களைத்திரஸ்கரிப்பதற்கு ப்ரயத்னம் செய்யுமிடத்திலும், மோக்ஷத்தை அடையவேண்டும் என்கிற இச்சை (ஜீவாத்மாவிற்கு) உண்டாகும் இடத்திலும், மோக்ஷமாகிற ப்ரயோஜனத்துடன் கூடிய பகவானைப்பற்றிய போகம் செய்யுமிடத்திலும் * முகம் முதலிய ஸந்திகளைப் பார்ப்பதற்குப் பரதரிஷியின் மதத்தில் துரந்தரமான புத்தியையுடையவர்களாயும் ஸமர்த்தர்களாயுமிருக்கிற உங்களால் ஸாவதானமாக இருக்கவேண்டியது.

[திரைக்குள்]

† ஸத்துக்களுடைய வழிகளின் எல்லையை விடாதவனாகிய வித்வானுடைய அந்தந்த ஸமயங்களுக்கு ஏற்படவேண்டிய ப்ரயோகங்களினால் ஸூர்யனுடைய கிரணங்களாலே போலத்தமோகுணமுடையவர்களுடைய ஆரம்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

---

* முகம், ப்ரதிமுகம், கர்ப்பம், அவமர்சம், நிர்வஹணம், என்கிற ஐந்தும் ஸந்திகள், இவற்றை விவேகனுடைய ஆரம்பம், பரமதபங்கம், முமுக்ஷுத்வத்தை உண்டாக்குதல், யோகத்தைச் செய்வித்தல், பலத்தை உண்டாக்குதல் என்கிற ஐந்து இடங்களிலும் கண்டுகொள்ள வேண்டியது.

† இந்த ச்லோகத்தில் இந்த நடனுடையவும், விவேகராஜாவினுடையவும், முமுக்ஷுவான புருஷனுடையவும், ஸூர்யனு

𑌸𑍂— (𑌕𑌰𑍍𑌣𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑍍) 𑌆𑌰𑍍𑌯𑍇! 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌕𑌾𑌮
[illegible] 𑌗𑍀𑌤𑌿𑌃 ।

𑌤𑌥𑌾𑌹𑌿—

𑌦𑍂𑌰𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌂𑌚 [illegible] 𑌅𑌯𑌂 𑌜𑌨𑌃 ।
𑌵𑌿𑌵𑍇𑌕𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌂 𑌵𑌿𑌜𑍇𑌤𑍁𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑌃 ॥ 29

ஸூ—(காது கொடுத்துக் கேட்டு ஆநந்தத்துடன்) ஆர்யே! நம்முடைய வ்யாபாரத்தையும், மோக்ஷம் வேண்டிய ப்ரகாரத்தையும் சேர்த்துச் சொல்லுகிற இந்த நாடகாரம்பத்தில் செய்யப்படுகிற பாட்டு உன்னால் நன்றாய்க் கவனிக்கத்தக்கது. ஆகையினால்

வெகுதூரத்தில் யோசிக்கக்கூடிய அதாவது நீண்டகாலத்துக்கு ப்பிறகு வரக்கூடியதை யோசிக்கக்கூடிய ஜ்ஞானமுள்ள இந்த ஜனமாகிய நானும், விவேக மஹாராஜாவும் விரோதியாகிய துஷ்ட—

டையவும் ஸ்வபாவங்கள் சொல்லப்படுகின்றன. எப்படியென்னில் :—ஸத்துக்கள் என்றால் நக்ஷத்திரங்கள், அவைகளின் வழி ஆகாசம். இது ஸூர்யனுக்கு விசேஷணமாகும் பொழுது ‘ தாமஸாரம்பா:’ என்றது இருட்டினுடைய வ்யாபாரங்கள் அல்லது இருட்டில் ஸஞ்சரிக்கக்கூடிய கோட்டான் முதலியவைகளினுடைய வ்யாபாரங்கள். நடன் பக்ஷத்தில் பரதசாஸ்திரம் தெரிந்த பெரியோர்களின் மார்க்கத்தை விடாதவனாகிய என்னுடைய அந்தந்த ஸமயங்களுக்கு உசிதமான அபிநயங்களின் ப்ரயோகங்களினால் தமோ குணத்தினால் த்வேஷத்தை அடைந்தவர்களின் தூஷணம் சொல்லவேண்டும் என்கிற ஆரம்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன என்றபடி. அன்றிக்கே ‘ ஸத்பத ’ என்பதினால் ஸந்மார்க்கவர்த்தனன் என்று கீழ்க்குறிக்கப்பட்டவனுடைய பெயர் இங்கே சொல்லப்படுகிறதாகவுமாம். விவேகனுடைய பக்ஷத்தில் அந்தந்த ஸமயத்துக்கு உசிதமான ப்ரயோகங்களினால் தமோகுணத்தினால் உண்டான மஹாமோஹாதிகளின் ஆரம்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன என்றபடி. ஜீவாத்மாவின் பக்ஷத்தில் பெரியோர்களின் மார்க்கத்தைவிடாத ப்ரபன்னனுடைய வர்ணாச்ரமம் முதலிய ஸங்கேதங்களுக்கு உசிதங்களான தர்மானுஷ்டானங்களினால் தமோகுணத்தினால் உண்டான அஹங்கார மமகாரங்கள் நிரோக்கடிக்கப்படுகின்றன என்றபடி.

[illegible]

[illegible]

[illegible]

ஞகிய நடனேயும், மஹாமோஹனேயும் ஜயிப்பதற்கு ஶக்தி உள்ளவர்களாகப் போகிறோம். (29)

[திரைக்குள்]

யாரடா, அவன்! நடர்களின் வம்ஶத்திற்கே தணல் போன்றவனும், கையில் தரிக்கப்பட்ட உறுதியாயும் ருசியுள்ளதுமான கரும்பாகிய தனுஸ்ஸை உடையவனும், வாஸனேயுடன் கூடியதாயும் ம்ருதுவாயும் இருக்கிற பாணங்களேயுடையவனும், பயமுறுத்தப்பட்ட எல்லா சத்ருஜனங்களேயுமுடையவனுமிருக்கிற நான் இருக்கும்பொழுது எல்லாத் தேவர்கள், அஸுரர்கள், ரிஷிகள், மனிதர்கள், இவர்களின் மனேவ்யாபாரங்களுக்குத் தான் கடவனும், துர்மதியைப் பத்தினியாக உடையவனும், யுத்தக் களத்தில் மஹா நடனுமிருக்கிற தேவனுகிய மஹா மோஹனுக்கு ஶத்ருவினிடத்திலிருந்து சொல்லுவதற்குத் தகாத ஒருவிஷயத்தைச் சொல்லுகிறவன் ?

ஸூ—(பயம், பரபரப்பு, இவற்றுடன் திரும்பிப்பார்த்துக்கொண்டு) ஆர்யே ! இவன் யார் ? கோபத்தின் மிகுதியினல் அதிகமாகச் சிவந்த கண்களே உடையவனுய் ஸஹாயத்தோடு கூடினவனுய் இவ்விடத்தைக் குறித்து வருகிறுன். ஆ, கஷ்டம் ! தெரிந்து கொள்ளப்பட்டது. இவனல்லவா ?

மோக்ஷஸ்ய விரோதி₄ஷு த்ரிஷு வர்கே₃ஷு திஷ்ட₂தாம் ।
ப்ரதா₄ந புருஷார்த₂ஸ்ய ப்ரஸித்₃தா₄தி₄தை₃வதம் ॥ 30

கிஞ்ச —

அர்தா₄வரோபித ஹரஸ்ய பௌருஷோऽயம்
வர்க₃த்ரயீ விமுகி₂தாம் விநேதா ।
ரத்யா ஸலீலபரிரம்ப₄ண லோலக₃த்யா ।
புஷ்பாயுத₄: புலகிதைககரோऽப்₄யுபைதி ॥

தத்₃வயம் க்ஷிப்ரமபஸ்ருத்ய காலோசித காமோத்ஸவ விஹார ரஸஜ்ஞே ஜீவலோகே ஸம்வ்ருத கு₃ப்தவ்ருத்தய: ஸ்வைரம் கரணீயமாசராம: ।

[இதி நிஷ்க்ராந்தௌ]

॥ இதி ப்ரஸ்தாவநா ॥

மோக்ஷத்துக்கு விருத்தங்களான மூன்று புருஷார்த்தங்களில் நிற்பவர்களுக்கு ப்ரதான புருஷார்த்தமாயிருக்கிற காமபுருஷார்த்தத்துக்குத் தேவதை. (30)

மேலும்—

பாதிமிகுதியாகச் செய்யப்பட்ட ருத்திரனுடைய புருஷத்தன்மையை உடையவனாயும், மூன்றுவது வர்க்கத்தை அலக்ஷ்யம் செய்பவர்களுக்குசிக்ஷை செய்யக்கூடியவனாயும், புஷ்பங்களையே ஆயுதமாக உடையவனாயுமிருக்கிற மன்மதன் விளையாட்டுடன் ஆலிங்கனம் செய்கிறதில் அசைந்து கொண்டிருக்கிற நடையுடையவளான ரதியுடன் கூட மயிர்க்கூச்சல் அடைந்த ஒருகையையுடையவனாய்க் கொண்டு இவ்விடத்துக்கு வருகிறான். (31)

ஆகையினால் இப்பொழுது நாம் சீக்கிரமாக விலகிப்போய் இந்த வஸந்தகாலத்துக்கு உசிதமான காம புருஷார்த்தத்துக்குத் தகுந்த உத்ஸவங்களிலுண்டாகிய லீலைகளால் நிறைந்த இந்த ஜீவலோகத்தில் மறைந்து கொண்டு காப்பாற்றப்பட்ட இருப்பை உடையவர்களாய் மேல் செய்யவேண்டியவற்றைச் செய்வோம்.

[என்று சொல்லிக் கொண்டு இருவரும் போகிறார்கள்.]

ப்ரஸ்தாவனை முற்றிற்று.

॥ மிஶ்ரவிஷ்கம்போ⁴ நாம த்³விதீயோ பா⁴க³: ॥

[தத: ப்ரவிஶதி வஸந்தத³த்தஹஸ்த: காமோ ரதிஸமேத: காம:]

காம: — ['க: ஏஷ:' இத்யாதி புந: படி²த்வா] அரே ! அரே ! ப⁴ரதகுலபாம்ஸந !

ஈஷந்நம்ரமநோஜ்ஞப்⁴ரூலதாசாபபா⁴ஜாம்
இந்தீ³வராக்ஷீஹ்ருத³யலக்ஷ்யா: ப்ரேமஸ்நேஹதி³க்³தை: ।
பா³ணா நயநாநாம் க்ஷணிதே யாவத³ர்தே⁴
ஶரணயது விவேக: காம் தி³ஶம் காந்தி³ஶீக: ॥ 32

